23

# நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!

## (6:9–11)

*"முதல் கிறிஸ்தவ நாடகம்"[1] என்பதின் மீதான திரையானது நான்கு முறை மேல் எழும்பியுள்ளது. குதிரை வீரர் ஒருவர் பூமியின் குறுக்கே ஓடி, அழிவின் தடத்தை விட்டுச் செல்லும் பயங்கரமான குதிரையின்மீது ஏறியிருந்ததை, யோவான் நான்கு முறை கண்டிருந்தார்.*

*குளம்பொலிகள் தேய்ந்து மறைந்தபோது, திரையானது ஐந்தாவது முறையாக மெதுவாக மேல் எழும்பத் தொடங்கிற்று. பேரழிவை ஏற்படுத்தும் நான்கு சவாரிகளின் யுத்தத்திற்குப் பின்பான, கொலைகளின் காட்சியைக் காணவிருத்தல் பற்றி யோவான் வியப்படைந்திருக்க மாட்டார். சிதைக்கப்பட்ட உடல்கள் புழுதியில் கிடக்கும் அமைதியான, அசைவற்ற காட்சியை அவர் எதிர்பார்த்து இருந்திருக்கலாம். அதற்குப் பதிலாக, யோவானின் காதுகள் - இடர்ப்பாடு அடைந்த குரல்களின் பல்லவியான - இரைச்சலினால் தாக்கப்பட்டன.*

*திரை மேலே எழுந்தபோது, நான்கு குதிரை வீரர்களின் கைவேலையை யோவான் கண்ணோக்கிக் கொண்டிருந்தார், ஆனால் இயல்பான இவ்வுலகம் காட்சியில் அமைந்திருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிகளின் உலகத்தினுள் கண்ணோக்கிக் கொண்டிருந்தார். பின்னணியில் தேவனுடைய பரிசுத்த இடம் இருந்தது, மேடையின் மையப்பகுதியில் பலிசெலுத்தும் மாபெரும் பீடம் இருந்தது. பலிபீடத்தைச் சுற்றிலும் இருந்த தரைப்பகுதியில் இருந்து குரல்கள் வந்ததாகக் காணப்பட்டது.*

*யோவானின் கண்கள் சரிப்படுத்தப்பட்டபோது, அவர் பலிபீடத்தின் அடிப்பகுதியில் நிழலான உருவங்களைக் கண்டார்: அவைகள், குதிரை வீரர்களின் காட்டுத்தனமான சவாரிகளின் பாகமாயிருந்த உபத்திரவத்தில் தங்கள் உயிர்களை ஒப்புக்கொடுத்திருந்த கிறிஸ்தவர்களின் ஆத்துமாக் களாய் இருந்தன. இந்த வேதசாட்சிகளின் கரங்கள் தேவனுடைய பரிசுத்த இடத்தை நோக்கி நீட்டப்பட்டிருந்தன, இவர்களின் குரல்களில் குழப்பம் நிறைந்திருந்தன.*

*யோவான், தாம் கண்டதைப் பின்வரும் வார்த்தைகளில் விவரித்தார்:*

> அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, வேதவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலை செய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது (6:9-11). ("பலிபீடத்தின் கீழ் இருந்த ஆத்துமாக்கள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

*அவர்களின் சலிப்பை யோவான் புரிந்து கொண்டிருப்பார். தேவன், ''தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து" கிரியை செய்வார் (உபாகமம் 32:43) என்று மோசே எழுதியிருந்தார். இயேசுவும் பின்வருமாறு ஒப்புக்கொண்டிருந்தார்: "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?'' (லூக்கா 18:7). தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்களுக்கு உபத்திரவம் தொடருவதைத் தேவன் ஏன் அனுமதித்தார் என்று அனேகமாக வியப்படைந்திருக்க வேண்டும்.*

*"பலிபீடத்தினடியில்" இருந்தவர்களால் கேட்கப்பட்ட கேள்வியைப் பற்றி யோவான் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கையில், திரை மூடியது. அவர் தமது தலையில் சுழலும் கேள்வியுடன் இருளில் அமர்ந்திருப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. தேவனுடைய கடைசி பதில் என்னவாக இருக்கும்?*

*அதற்குப் பதில் அளிப்பதுபோல், திரை மீண்டும் மேல்நோக்கி எழும்பத் தொடங்கிற்று. யோவானுடைய காதுகள் மீண்டும் ஒருமுறை ஒலியினால் தாக்கப்பட்டன; ஆனால் இந்த வேளையில், குரல்களுக்குப் பதிலாக, மோதல்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வெடி ஒலிகள் ஆகியவற்றை அவர் கேட்டார்: அண்டத்தைக் கிழித்துப் பிளக்கும் ஒலிகள்! யோவான் கண்ட நிகழ்ச்சியானது அவரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்க வேண்டும். அவர் எழுதுகையில் அவரது கைகள் நடுங்கினவா?*

> அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும்

*தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள் (6:12-17).*

*ஐந்தாம் மற்றும் ஆறாம் முத்திரைகள் உடைக்கப்பட்டபோது வெளிப்படுத்தப்பட்டவற்றைக் காட்டிலும் அதிகம் நாடகத்துவமான காட்சிகளைக் கற்பனை செய்து பார்த்தல் என்பது கடினமானதாக இருக்கும். இந்தக் காட்சிகள் எவற்றை அர்த்தப்படுத்துகின்றன? இவைகள் ஒன்று மற்றொன்றுடன் சில வகைகளில் உறவுபட்டுள்ளனவா?*

*இரண்டாவது கேள்வியைப் பொறுத்த மட்டில், ஆறாவது முத்திரைக் காட்சியானது, ஐந்தாம் முத்திரைக் காட்சியுடன் தொடர்புடைய வகையில் கேட்கப்பட்ட கேள்விக்குத் தேவனுடைய பதிலாக உள்ளது என்று நான் நம்புகின்றேன். "இந்தக் காட்சிகள் எவற்றை அர்த்தப்படுத்துகின்றன?" என்ற முதல் கேள்விக்கு இந்தப் பாடத்திலும் அடுத்த பாடத்திலும் பதில் அளிக்கலாம் என்று நாம் நம்புகின்றோம். இந்த எடுத்துரைப்பில் நாம், ஐந்தாவது முத்திரையை ஆராய்வோம்; அடுத்த பாடத்தில் நாம், ஆறாவது முத்திரையை ஆராய்வோம். ஐந்தாவது முத்திரையை தனிப்பட்ட வகையாக்குவதற்கு நான், இந்தப் படிப்பை, "நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!"[2] என்று அழைக்கின்றேன்.*

## *நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்கள் (6:9, 10)*

**கேள்வியின் அமைவு**

*ஐந்தாவது முத்திரை உடைக்கப்பட்டபோது வெளிப்படுத்தப்பட்ட காட்சியின் விபரங்களைக் கண்ணோக்குவதில் இருந்து நாம் தொடங்கு வோம். பல உண்மைகள் தெளிவாக உள்ளன. முதலாவது, இதில் சித்தரிக்கப் பட்டவர்கள் வேதசாட்சிகளாய் இருந்தனர்;[3] இவர்கள் "தேவவசனத் தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர் களாய்" இருந்தனர் (வசனம் 9ஆ). "கொல்லப்பட்ட" என்ற வார்த்தை, இயேசுவின் மரணம் குறித்துப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது (5:6, 9, 12; 13:8ஐயும் காணவும்).[4] இவர்கள், யோவான் நாடுகடத்தப்பட்டிருந்த அதே காரணத்திற்காகவே கொல்லப்பட்டிருந் தனர் (1:9; 1:2ஐயும் காணவும்). இவர்கள் பேரரசின் "உருவச்சிலையை ஆராதிக்க" மறுத்திருந்தனர் (13:15) மற்றும் "சிரச்சேதம்" செய்யப்*

பட்டிருந்தனர் (20:4) என்று பிற்பாடு நாம் கற்போம். மரணத்தைத் தழுவ வேண்டியிருக்கும் என்று அச்சுறுத்தப்பட்ட நிலையிலும்கூட இவர்கள் உண்மையாய் நிலைத்திருந்தனர் (2:10); இவர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் ஜீவனைத் தாங்களாகவே ஒப்புக்கொடுத்திருந்தனர்.

இயேசு தமது சீஷர்களிடத்தில், மனிதர்கள் "உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள், என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" என்று எச்சரித்திருந்தார் (மத்தேயு 24:9). ஸ்தேவான் கல்லெறியப்பட்டது தொடங்கி, (நடபடிகள் 7:58-60) மற்றும் யாக்கோபு சிரச்சேதம் செய்யப்பட்டது (நடபடிகள் 12:1, 2; மாற்கு 6:22-29ஐக் காணவும்) கிறிஸ்தவ வேதசாட்சிகளின் இரத்தம் பூமியைக் கறைப்படுத்தியிருந்தது. அதிலிருந்து, ரோமப் பேரரசு, இயேசுவைப் பின்பற்றுபவர்கள்மீது ஒரு "தாக்குதல் வேளையை" ["open season"][5] அறிவித்திருந்தது. வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், பவுல், அவரது உடன் ஊழியர்களான லூக்கா மற்றும் தீமோத்தேயு, யோவானைத் தவிர பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், மற்றும் நாம் அறியாத, ஆனால் கர்த்தருக்கு விலையேறப் பெற்றவர்களாய் இருந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் உட்பட்ட யாவரும், வேதசாட்சிகளின் பட்டியலில் இருந்தனர்.

யோவான், இந்த வேதசாட்சிகளின் உடல்களை அல்ல, ஆனால் இவர்களின் "ஆத்துமாக்களையே" கண்டார் என்பதைக் கவனியுங்கள். "ஆத்துமாக்கள்" என்ற வார்த்தை, "உயிர்" என்று மாத்திரமே அடிக்கடி அர்த்தப்படுகிற *psuche*[6] என்ற வார்த்தையின் பன்மை வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத்தேயு 20:28; வெளிப்படுத்தின விசேஷம் 12:11).[7] இங்கு இந்த வார்த்தை அனேகமாக, அவர்களின் அழியாமையுள்ள ஆவிகளைக் குறிப்பிடலாம்.[8] யூதர்கள், ஒரு மனிதனின் ஆவியானது தான் குடியிருந்த உடலின் எஞ்சியுள்ள பகுதி என்ற வகையில் தக்கவைக்கப்படுகிறது என்று நினைத்தனர் (மத்தேயு 14:26; லூக்கா 24:36, 37). (யோவானுடைய நண்பர்கள் மற்றும் உடன் ஊழியர்களில் பலர் வேதசாட்சியாக மரித்திருந்தபடியால், பலிபீடத்தின் கீழ் இருந்தவர்களை அவர் அடையாளம் கண்டுகொண்டாரா என்பது பற்றி நான் வியப்படைகின்றேன்.)

இந்தப் பரிசுத்தவான்கள் இன்னமும் உயிருடன் இருந்தனர் என்பது இன்னொரு தெளிவான உண்மையாக உள்ளது. மரணம் என்பது முடிவாக இருந்தது இல்லை. அவர்களை அழித்து விட்டதாக அவர்களின் விரோதிகள் நினைத்தனர், ஆனால் கொலையாளிகளின் பட்டயம் அவர்களால் கொலை செய்யப்பட்டவர்களைக் கர்த்தருடைய பிரசன்னத்திற்குக் கொண்டு சென்றிருந்தது என்பதே உண்மை நிலையாக இருந்தது.[9] வேத சாட்சிகளாக மரித்த இவர்கள், எங்கிருந்தனர் என்பதையும் தங்களுக்கு என்ன நேர்ந்திருந்தது என்பதையும் அறிந்திருந்தனர். சிலர் உரிமை கோருவதுபோல், இவர்களின் ஆத்துமாக்கள் வெறுமனே "உறங்கிக்"கொண்டு மாத்திரம் இருக்கவில்லை.[10]

துன்புறுத்தப்படுதல் என்பது சிலகாலத்திற்குத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது என்பது தெளிவான மூன்றாவது முடிவாக இருந்தது -

ஏனென்றால் போதுமான காலம் கடந்திருந்தது என்று வேதசாட்சியாக மரித்திருந்த இவர்கள் நம்பியிருந்தனர். துன்புறுத்தப்படுதல் அதிகமாகக்கூட ஆகியிருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தின் முந்திய அதிகாரங்களில் வேதசாட்சியாக மரித்திருந்த ஒரே ஒரு நபர் மாத்திரம் - அந்திப்பா (2:13) - குறிப்பிடப்பட்டிருந்தார்; ஆனால் இந்த தரிசனம், அந்த எண்ணிக்கை பெரியதாக இருந்தது என்ற மனப்பதிவை விட்டுச் செல்கிறது. மேலும் உபத்திரவம் முடிதல் என்பதிலிருந்து வெகுதூரத்தில் இருந்தது. கேள்விகேட்டவர்களுக்கு, "தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களா"ன மற்ற பலரும் மரிக்க வேண்டும் என்று கூறப்பட்டது (6:11).

இந்த தரிசனத்தின் மற்ற விபரங்களினுடைய முக்கியத்துவம் அவ்வளவு தெளிவாயிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, "பலிபீடத்தின் கீழே" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்னவாக உள்ளது?

பலிபீடத்தைப் பற்றிக் குறிப்பிடுதல் என்பது, வெளிப்படுத்தின விசேஷத்தில் பழைய ஏற்பாட்டின் சொல்லாக்கத்திற்கு, விசேஷமாக ஆசரிப்புக்கூடாரம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றிற்குத் தொடர்பான அடையாளத்துவத்திற்குச் சீர்பொருந்தியதாக உள்ளது. பலிபீடம் பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (8:5; 11:1; 14:18; 16:7) மற்றும் இது, மகாப்பரிசுத்த ஸ்தலத்தின் நுழைவாயிலில் இருந்த பொன்னால் ஆன தூபப்பீடத்தை வழக்கமாக நமக்கு நினைவூட்டுகிறது (8:3; 9:13; யாத்திராகமம் 40:26, 27ஐக் காணவும்). இருப்பினும் வெளி.6ல், வேதசாட்சிகளாக மரித்தவர்கள் தங்கள் இரத்தத்தைத் தேவனுக்குப் பலியாகச் சிந்தியிருந்தனர். இரத்த பலிகள் பொன்னால் ஆன பலிபீடத்தில் அல்ல ஆனால் பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே இருந்த தகனபலிசெலுத்தும் வெண்கலப் பலிபீடத்தின்மீது செலுத்தப்பட்டன (யாத்திராகமம் 39:39; 40:29).[11] இராபர்ட் மவுன்ஸ் அவர்கள், "இங்கு பலிபீடம் என்பது தகனபலி பீடமா அல்லது தூபப்பீடமா என்று உய்த்துணர்தல் என்பது அனேகமாக முக்கியமற்றதாக உள்ளது[12] … யோவானின் தரிசனத்தில் இந்த இரு பீடங்களும் ஏன் ஒன்றாகக் கலந்திருக்கக்கூடாது என்பதற்குக் காரணம் எதுவும் இருப்பதில்லை" என்று விளக்கம் அளித்தார்.[13] பலி என்பதே இந்த தரிசனத்தின் முக்கிய ஆய்வுக்கருத்தாக உள்ளது என்பதால், இந்த இடத்தில் பலிபீடத்தின் தோற்றத்தை நான், "வெண்கல பலிபீடம்" என்பதாகவே காண்கின்றேன்.[14]

இந்த பலிபீடத்தின்மீது பலிகள் எவ்வாறு செலுத்தப்பட்டன என்பதை நாம் பழைய ஏற்பாட்டில் ஆய்வுசெய்யும்போது, பலிசெலுத்தப்பட்ட மிருகத்தின் "இரத்தம் முழுவதையும்" ஆசாரியர், "ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றி"னார் என்று நாம் கண்டறிகின்றோம் (லேவியராகமம் 4:18; வசனங்கள் 7, 30; யாத்திராகமம் 29:12ஐயும் காணவும்). யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, பாவநிவாரண நாளின்போது, பலிபீடத்தைச் சுற்றிலும், கணுக்கால் ஆழத்திற்கு இரத்தம் இருந்தது. பூமியில் இரத்தத்தை ஊற்றுதல் என்பது, சடங்கின் முக்கியமான பாகமாயிருந்தது, ஏனெனில் தேவன், "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில்

*இருக்கிறது" என்று கூறியிருந்தார் (லேவியராகமம் 17:11அ; வசனம் 14; உபாகமம் 12:23ஐயும் காணவும்).*

*எனவே நாம், வேதசாட்சிகளாக மரித்தவர்களின் ஆத்துமாக்கள் "பலிபீடத்தின் கீழே" இருந்தன என்ற உண்மையானது முக்கியத்துவம் வாய்ந்தது என்று முடிவு செய்கின்றோம், ஏனென்றால் அவர்களின் உயிரான இரத்தம் கர்த்தருக்கென்று பலியாக ஊற்றப்பட்டிருந்தது.[15] பவுல் தமக்குக் காத்திருந்த வேதசாட்சியாகும் மரணம் பற்றிக் குறிப்பிட்டபோது, இதே அடையாளத்தைப் பயன்படுத்தினார்: "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" (2 தீமோத்தேயு 4:6).*

***கேள்வியின் தீவிரத்தன்மை***

*இந்தப் பின்னணித் தகவலைக் கொண்டுள்ள நிலையில் நாம், பலிசெலுத்தப்பட்டிருந்தவர்களினால் கேட்கப்பட்ட கேள்வியைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அவர்களின் கேள்வி இந்தக் காட்சியின் அச்சாணி மையமாக உள்ளது: ''அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" (வசனம் 10).*

*இந்தக் கேள்வியானது முறைப்பாட்டின் காற்றொன்றை அடக்கியிருக்கலாம், ஆனால் இது மரியாதைக் குறைவு எதையும் விளக்கப்படுத்துவதில்லை. "ஆண்டவரே" என்பது முற்றான அதிகாரத்துடன் இருப்பவர் என்று அர்த்தப்படும் ''despot'' என்ற வார்த்தையே நாம் பெறும் கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[16] இது ஒரு அடிமை, தனது வாழ்வின்மீது முழுமையான கட்டுப்பாடு கொண்ட ஒருவரை அழைக்கப் பயன்படுத்தும் சொற்றொடராக இருந்தது. "பரிசுத்தம்" என்ற வார்த்தை, தேவன் பாவத்தைச் சகிக்க இயலாதவர் என்றும், எனவே அவர், துன்புறுத்துபவர்களின் முரட்டுத்தனத்தை எந்நாளும் பொறுத்திருக்கமாட்டார் என்றும் ஒப்புக்கொள்ளுதலாக இருந்தது. தேவனை "உண்மையுள்ளவர்'' என்று குறிப்பிடுதலானது, அவர் தமது - மக்களைத் துன்புறுத்துபவர்களைப் பழிவாங்குதல் உட்பட, தம்முடைய - வாக்குத்தத்தங்களைக் காக்கின்றவர் என்று புரிந்துணருதலாக இருந்தது. இந்த விசுவாசிகளைப் பொறுத்தமட்டில், அவர்களின் விரோதிகளைத் தேவன் பழிவாங்குவாரா இல்லையா என்பது அல்ல, ஆனால் எப்போது பழிவாங்குவார் என்பதே கேள்வியாயிருந்தது.*

*கலங்கச் செய்யும் கேள்வி. இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில், பழிவாங்குதலின்மீதான இதன் வலியுறுத்தம்தான் நவீன வாசகர்களைக் கவலையடையச் செய்கிறது. கிறிஸ்தவப்பதிவேடு[17] ஒன்றில் பழிவாங்குதல் என்ற கருத்திற்கு இடமில்லை என்று சிலர் வலியுறுத்துகின்றனர். அவர்கள், "நம்மை ஒடுக்குகின்றவர்களுக்கு நாம் நமது மறுகன்னத்தையும் திருப்பிக் காண்பிக்க வேண்டும் என்று இயேசு போதிக்கவில்லையா?[18] இயேசுவின்*

*விரோதிகள் அவரைச் சிலுவையில் அறைந்தபோதும்கூட, அவர்களுக்காக அவர் ஜெபிக்கவில்லையா?"*[19] என்று கூறுகின்றனர்.

இது ஒரு சாதாரணமான விஷயமல்ல, ஆனால் பின்வரும் கருத்துக் களைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்:

(1) கிறிஸ்தவர்களின் வாழ்வில் பிரச்சனைகளும் சோதனைகளும் வரும்போது, அவர்கள் சிலவேளைகளில், இருதயத்தில் கிடுக்கிப்பிடி போடும் கேள்விகளைக் கொண்டுள்ளனர். கேள்விகேட்பவர், சர்வவல்ல வரில் கொண்டுள்ள விசுவாசத்தை இழந்து போகாதிருக்கும் வரையில் இப்படிப்பட்ட கேள்விகளைக் கொண்டிருப்பதில் தவறு எதுவும் இல்லை என்றுகூட இது மறைமுகமாய் உணர்த்துகிறது.

(2) இந்த ஆத்துமாக்கள், பழிவாங்குதல் என்ற விஷயத்தைத் தேவனு டைய கரங்களில் விட்டுவிட்டனர் என்பதை நினைவுகூருதல் முக்கியமான தாக உள்ளது. தனிப்பட்ட வகையில் பழிவாங்குதல் என்பதற்கு எதிராகப் புதிய ஏற்பாடு போதிக்கிறது, ஆனால் அது, தேவபக்தியற்றவர்களை ஒருநாளில் தேவன் தண்டிப்பார் என்றும் வலியுறுத்துகிறது. எடுத்துக்காட் டாக, இந்தப் பாடக்கருத்தின்மீது, ரோமர் 12:17-21ல் பவுலின் அறிவுறுத்தல் களை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்:

> ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள், ... கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். ... நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங் கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு, ... நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

இருப்பினும், எதிர்த்துத் தாக்குதல் செய்யாமை என்ற இந்த நன்னெறிக் கூற்றுக்கு மத்தியில் பவுல், ஒரு நாளிலே தேவன் கிறிஸ்தவர்களுக்காக வாதாடி அவர்களைத் தவறாக நடத்தியவர்களைத் தண்டிப்பார் என்று வலியுறுத்தினார். பின்பு பவுல், ''பிரியமானவர்களே, ... நீங்கள் பழிவாங்காமல்'' என்று கூறினார், பின்பு அவர், ''பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்'' என்று கூறினார் (ரோமர் 12:19).

தனிநபருக்குரிய அல்லது தனிப்பட்ட எதிர்த்தாக்குதலைப் புதிய ஏற்பாடு கண்டனம் பண்ணுகிறது என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பழிவாங்குதல் என்பது உண்மையான அல்லது கற்பனை செய்துகொள்ளப்பட்ட எந்த ஒரு எதிரிக்கும் செய்யப்பட வேண்டிய, இயல்பான, நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க பதில்செயலாகப் பலரால் மேன்மைப்படுத்தப்பட்டுள்ளது.[20] "பழிவாங்குதல் இனிமையானது!" என்பது பழங்காலக் கூக்குரலாக உள்ளது. இன்றைய நாட்களில் சிலர் இதைப் பின்வருமாறு விளக்கப்படுத்துகின்றனர்: "நான் பித்தனாவதில்லை; நான் சரிக்குச்சரி செய்கின்றேன்.'' ஏராளமான புத்தகங்கள் மற்றும்

*திரைப்படங்களின் கதைக்கருவானது பழிவாங்குதல் என்ற கருத்தையே சுற்றிச் சுழலுவதாக உள்ளது; வில்லன் ஒருவனின் தலையின்மீது இடர்ப்பாடுகளையும் சங்கடத்தையும் கதாநாயகன் குவிக்கின்றபோது, பார்வையாளர்கள் உற்சாகம் அடைகின்றனர். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நாம், இந்த நடையில் பிடிபட்டு விடுவதற்கான சோதனையை எதிர்த்து நிற்க வேண்டும். இன்னமும் வேதாகமம், ''ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்'' என்றே கூறுகிறது (1 தெசலோனிக்கேயர் 5:15). பழிவாங்குதல் என்பது எவ்வித மாறுபாடுமின்றி, கிறிஸ்தவமற்ற சிந்தனைகள் மற்றும் உணர்வுகளை உள்ளடக்குவதாக இருக்கிறது. இருதயத்தில் ஒரேவேளையில் கசப்பும் அன்பும் நிறைந்திருக்க முடியாது.*

*இதற்கு மறுபுறத்தில், தீமையானது தண்டிக்கப்பட வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது - மற்றும் இது, தீமையானது தண்டிக்கப்படும் ஒரு நாள் வரும் என்று நமக்கு உறுதிப்படுத்துகிறது. இவ்விதமாக நாம், முன்பு குறிப்பிட்டது போன்ற வசனப் பகுதிகளைக் கொண்டுள்ளோம்: "அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து" (உபாகமம் 32:43); "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரா?'' (லூக்கா 18:7); "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ரோமர் 12:19அ).*

*வெளிப்படுத்தின விசேஷம் 6:10ன் மொழிநடையானது இரத்த தாகம் கொண்டதாகச் சிலரைத் தாக்கினாலும், பாவம் என்பது என்றென்றைக்கும் தண்டிக்கப்படாமல் விடப்படுதல் என்பது தவறானதாக இருக்கும் என்று பெரும்பான்மையானவர்கள் நம்புகின்றனர். சாத்தானும், அவனது தீமையின் சக்திகளும் கடைசியில் அழிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், உங்கள் தலையை அசையுங்கள்.[21] உங்களை நான் காண இயலாது, ஆனால் உங்களில் பெரும்பான்மையானவர்கள் உங்கள் தலைகளை அசைத்தீர்களென்று நான் அறிவேன். நன்மைக்குப் பலன் அளிக்கப்படுதலும் தீமை தண்டிக்கப்படுதலும் சரியானது என்றும், இதற்கு நேர் எதிரான விஷயம் உண்மையாய் இருத்தல் தவறானது என்றும் உள்ளுணர்வின் மூலம் நாம் அறிகின்றோம்.[22]*

*இருப்பினும் ''தேவனுடைய பழிவாங்குபவர்''[23] என்ற பணிப் பொறுப்பை நாமே நம்மீது மேற்கொள்ளுதல் என்பது உங்களுக்கும் எனக்கும் உரியதல்ல என்பதை நான் வலியுறுத்த அனுமதியுங்கள். பவுலின் கட்டளையை மறந்து விடாதிருங்கள்: "பிரியமானவர்களே, ... நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (ரோமர் 12:19).[24] ''பலிபீடத்தின் கீழிருந்த'' பரிசுத்தவான்கள் அதைத்தான் செய்து கொண்டிருந்தனர்.*

*(3) சில விளக்கவுரையாளர்கள், "எதுவரைக்கும்?" என்று கூப்பிட்டவர்கள், தேவனின் நிமித்தமானவற்றினின்று விடுவிக்கப்பட்டவர்களைப் போல் தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலைக் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தை முன்வைத்துள்ளனர் - இதை உண்மையென்றே நான் நம்புகின்றேன். அந்தத் துன்மார்க்கர்மீது தேவன் பழிவாங்குதலினால் அவர்கள் (பலிபீடத்தின் கீழ் இருந்தவர்கள்) தனிப்பட்ட வகையில் ஆதாயம் எதுவும் அடையப் பெற்றிருக்கவில்லை; அவர்கள் ஏற்கனவே தங்கள் நித்திய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையில் இருந்தனர். அவர்கள் தேவனுடைய நற்பெயரைப் பற்றி அக்கறை கொண்டிருந்தனர். தேவன் ஒன்றும் செய்யவில்லையென்றால், அவர்களின் விரோதிகளுக்கு, கர்த்தர் பலவீனமானவராகவும் ரோமர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களுடன் ஒப்பிடுகையில், செயல்விளைவற்றவராகவும் காணப்படலாம்.*

*அந்த அக்கறை வேதவசனங்களில் அடிக்கடி ஒலிக்கப்படுகிறது. உதாரணமாக, சங்கீதம் 79ஐ வாசித்துப் பாருங்கள்: சங்கீதக்காரர், "எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவிசெய்து, உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்'' (வசனம் 9). ''உமது நாமத்தின் மகிமையினிமித்தம்" மற்றும் "உமது நாமத்தினிமித்தம்" என்ற வார்த்தைகளை அடிக்கோடிடவும்; மக்கள் கர்த்தரை எவ்விதமாய்க் கண்ணோக்குவார்கள் என்பது பற்றி அக்கறை வெளிப்படுத்தப்பட்டது. பின்பு அந்த எழுத்தாளர், "அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?" என்று கேட்டார் (வசனம் 10அ). இது, புறதெய்வ வணக்கத்தார் ''அவர் உண்மையிலேயே தேவனாக இருந்தால், அவர் ஏன் சிலவற்றைச் செய்யாமல் இருக்கின்றார்?'' என்று கேட்கின்ற குறிப்பிட்ட வகையிலான குற்றப்படுத்துதலாக உள்ளது. இந்தக் காரணத்தினால் சங்கீதக்காரர், "உமது ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குத(லுக்கு)" பின்வரும் வார்த்தைகளில் வேண்டுதல் செய்தார் (வசனம் 10இ): "ஆண்டவரே, எங்கள் அயலார் [அதாவது, அவர்களைச் சுற்றியிருந்த விரோதி நாடுகள்] உம்மை நிந்தித்த நிந்தையை, ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப்பண்ணும்" (வசனம் 12). அவர் "எங்கள் அயலார் எங்களை நிந்தித்த நிந்தையை" என்று கூறுவதில்லை, ஆனால் "ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை" என்று கூறினார்.*

*இந்தக் காரணிகள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து சிந்திக்கப்படும்போது, பலிபீடத்தின் கீழ் இருந்தவர்களின் கூப்பிடுதல் "மன்னிக்கக் கூடியதாக மாத்திரம் அல்ல, ஆனால் சரியானதாகவும்'' இருந்தது என்று மிகாயீல் வில்காக் அவர்கள் சரியாகவே கூறினார்[25] என்று நான் நம்புகிறேன்.*

*மிகவும் நிலையான ஒரு கேள்வி. இப்போது நாம், யோவானின் நாட்களில் வேதசாட்சியாக மரித்தவர்களிடத்தில் இருந்து நமது கவனத்தை, பொதுவாக தேவனுடைய மக்கள்மீது திருப்புவோம். முதல் நூற்றாண்டின் முடிவுக்கு அண்மையில் ஒலிக்கப்பட்ட கேள்வியானது, கர்த்தரைப் பின்பற்ற முயற்சி செய்கின்றவர்களுக்கு என்றென்றைக்கும் புதிர்நிறைந்ததாக இருந்துள்ளது.[26] தாவீது, "கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர்,*

*எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?" என்று கேட்டார் (சங்கீதம் 13:1, 2).*

ஆபகூக்கும் இதே கேள்வியைக் கேட்டார்: *"கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே!" (ஆபகூக் 1:2).* எரேமியா, *"எதுவரைக்கும்?"* என்ற கேள்வியுடன் *"ஏன்?"* என்ற கேள்வியையும் ஒன்று கலந்தார்: *"... ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன? ... எந்தமட்டும் தேசம் புலம்பி, எல்லா வெளியின் புல்லும்வாடி, அதின் குடிகளுடைய பொல்லாப் பினிமித்தம் மிருகங்களும் பறவைகளும் அழியவேண்டும்!" (எரேமியா 12:1இ - 4அ).*

விசுவாசிகள் இந்தக் கேள்விகளுடன் எப்போதுமே போராடிக் கொண்டுள்ளனர். தேவன் துன்மார்க்கரைத் தண்டிப்பதாகவும் நீதிமான் களை நிலைநிறுத்துவதாகவும் வாக்களிக்கின்றார், ஆனால் இது நாம் பொறுமையற்றவர்கள் ஆகும்படிக்கு மிக அரிதாகவே நடைபெறுவதாக நாம் காண்கின்றோம். நம்மைப் பற்றி நாம் காணுகையில், தேவபக்தியற்ற வர்கள் சுகித்திருக்கையில், தேவபக்தியுள்ளவர்கள் அடிக்கடி ஒடுக்கப் படுகின்றனர்.

**இந்த உலகத்தில்**

**தேவபக்தியுள்ளவர்** **தேவபக்தியற்றவர்**



தேவன் ஒவ்வொன்றையும் சரியாக்குவார் என்று நாம் நமது இருதயங்களில் நம்புகின்றோம், ஆனால் அவர் இதை எப்போது செய்வார்? ஆண்டுகளினூடே மற்றவர்களைப் போல், நாமும் தேவனுடைய கால அட்டவணை[27] பற்றிப் பிரச்சனையைக் கொண்டுள்ளோம். அது நம்மை, நீங்களும் நானும் கேட்கும் கேள்வியினிடத்தில் கொண்டுவருகிறது.

*ஒரு தனிப்பட்ட கேள்வி.* நாம் இன்னமும் கேள்விகளைக் கொண்டுள் ளோம். சிலவேளைகளில் நமது கேள்விகள், வெளிப்படுத்தின விசேஷம் 6:10ல் கேட்கப்பட்ட கேள்வியைப் போல் உள்ளன. ஆணியால் அறையப் பட்டுள்ளதாகக் காணப்படும் ஒவ்வொன்றும் கழன்று வந்து கொண்டிருப்ப தாக உணரும் ஒரு உலகத்தில் நாம் வாழ்கின்றோம்.[28] நாம் நமது தலைகளை அசைத்து, *"இந்த உலகம் என்னவாகிக் கொண்டிருக்கிறது?"; "இது*

*நடைபெறுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் கர்த்தர் அனுமதிப்பார்?"; "எதுவரைக்கும் ஆண்டவரே நீர் இந்தக் குழப்பத்தை சீர்படுத்தாதிருப்பீர்?" என்கிறோம்.*

*சிலவேளைகளில் நமது கேள்வி அதிகம் தனிப்பட்ட வகையிலானதாக உள்ளது: "எனது வாழ்வில் தவறாயிருப்பதை ஆண்டவரே நீர் இன்னும் எவ்வளவு காலம் சீர்படுத்தாதிருப்பீர்?" யோவானின் நாட்களில்இருந்த கிறிஸ்தவர்களைப் போன்று, நீங்களும் - உங்கள் குடும்பம், உங்கள் முன்னாள் நண்பர் அல்லது உங்கள் அயலகத்தவரால் - துன்புறுத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் சரியானதைச் செய்வதற்குப் போராடிக் கொண்டு இருக்கையில் தவறாக நடத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் எப்போதுமே நேர்மையான முறையில் உங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கலாம், ஆனால் உங்கள் முதலாளியிடம் மனங்குளிரப்பேசி (அவரைக் காக்காய் பிடித்து), தமது நேரத்தை வீணில் செலவிடும் ஒருவரே பதவி உயர்வு பெறுபவராய் இருப்பார் என்றிருக்கலாம்.*

*ஒருவேளை நீங்கள், எரேமியா தீர்க்கதரிசியைப் போல், உங்கள் கேள்வியுடன் "ஏன்?" என்பதையும் கூட்டிக்கொள்ளலாம்: "ஆண்டவரே, எனக்கு ஏன் இவ்வளவு அதிகமான பிரச்சினைகள்?" "ஆண்டவரே, எனது துணை (அல்லது பிள்ளை) இறந்து போனது ஏன்?" "ஆண்டவரே, நான் எனது பிள்ளையைச் சரியான முறையில் வளர்க்க முயற்சி செய்தேன்! அவர்கள் தவறானவர்கள் ஆனது ஏன்?" "ஆண்டவரே, நான் செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்த இயலாது போவது ஏன்?" "ஆண்டவரே, எனக்கு புற்றுநோய் (அல்லது வலிப்புநோய் அல்லது இருதய தொந்தரவு) வந்தது ஏன்?" "ஆண்டவரே, நான் ஏன் இவ்வளவு தனிமையாய் இருக்கின்றேன்?" "ஆண்டவரே, நான் இன்னும் எவ்வளவு காலம் இப்படியே இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை! எதுவரைக்கும் நீர் எனக்கு உதவிசெய்யாதிருப்பீர்? எதுவரைக்கும்?"*

*வசனங்கள் 9, 10ல் உள்ள காட்சியை மீண்டும் கண்ணோக்குவதற்குச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் சிந்தையில் தோன்றும் வார்த்தை என்ன? "பொறுமையின்மை?" "குழப்பம் அடைந்த நிலை?" "சலிப்பு அடைந்த நிலை?" "கலக்கம் அடைந்த நிலை?" "இடர்ப்பாடு அடைந்த நிலை?" தேவனுடைய மக்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர், அதைப் பற்றி ஏதேனும் செய்வதற்கு - உடனடியாக - தேவன் வராதிருந்தது ஏன்? என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியாதிருந்தது! அவர்கள் எவ்வளவு தடுமாறிக் கலங்கியிருப்பார்கள் என்பதை நீங்கள் விவரிக்கலாம்.*

## தேவன் பதில்களைக் கொண்டுள்ளார் (6:11)

*"நீங்கள் கேள்விகளைக் கொண்டிருந்தால், தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்" என்பது இந்தப் பாடத்தின் தலைப்பில் பிரதிபலிக்கிற கருத்தாக உள்ளது. இந்த வேளை, நமது வசனப் பகுதியில் - முதல் நூற்றாண்டில் இருந்தவர்களுக்கும் நமக்கும் - காணக்கூடிய பதில்கள் யாவை என்பதைக் கண்ணோக்குவதற்கான வேளையாக உள்ளது.*

*அப்போது தேவனுடைய பதில்*

நாம் வசனம் 11ஐ வாசிக்கும்போது, நாம் ஏமாற்றம் அடையலாம் - ஏனெனில் முதலில் இது, தேவன் பரிசுத்தவான்களின் கூப்பிடுதலைப் புறக்கணித்தார் என்பதுபோல் தோற்றம் அளிக்கிறது. "எது வரைக்கும்?" என்ற கேள்வியானது பதில் அளிக்கப்படாமல் ஆகாயத்தில் தொங்குவது போல் காணப்படுகிறது:

> அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது, அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணி விடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம்[29] இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது (வசனம் 11).

இருப்பினும் மேலும் படித்தபின்பு, இவ்வசனத்தில் பதில் ஒன்று தரப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். ஏற்பாடு, செயல்பாடு மற்றும் புத்திகூறுதல் ஆகியவற்றில் நாம், மூன்று பாகங்கள் கொண்ட பதில் ஒன்றைக் காண்கின்றோம். "சரியானதைச் செய்வதற்கு நீங்கள் என்னில் நம்பிக்கை கொண்டவர்களாய் இருக்க வேண்டும்" என்பது அடிப்படை யான பதிலாக உள்ளது.

மூன்று பாகங்கள் பின்வருமாறு:

(1) *"என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: நீங்கள் புரிந்துகொள்ள இயலாது."* வேதசாட்சிகளாக மரித்தவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டன மற்றும் அவர்கள் "இளைப்பாறும்படி" கூறப்பட்டனர் என்ற உண்மையானது, அவர்களைத் தேவன் புறக்கணிக்கவில்லை என்பதையும் அவர்களின் கேள்வியை அவர் புறக்கணிக்கவில்லை என்பதையும் நாம் அறியச் செய்கிறது. பின்பு ஏன் அவர் பதில் அளிக்காதிருந்தார்? அனேகமாக இது, அவர்கள் புரிந்துகொள்ள இயலாது என்பதால் இவ்வாறு இருந்திருக்கலாம். வேதவசனங்களின் மற்ற இடங்களில் கேட்கப்பட்டுள்ள "எது வரைக்கும்?" என்ற கேள்வியை ஆய்வு செய்யுங்கள். பெரும்பாலான வேளைகளில் தேவன் பதில் அளிப்பதற்கு அக்கறை கொள்ளவில்லை.[30] தேவனுடைய முழுமையான திட்டங் களையும் நோக்கங்களையும் பொறுத்தவரையில், மனிதர்கள் அவற்றைப் புரிந்துகொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றனர் (ஏசாயா 55:8, 9).[31]

J. W. இராபர்ட்ஸ் அவர்கள், "கேள்வி கேட்பவர்களின் அக்கறையைக் காட்டிலும் தேவனுடைய அக்கறை விலாசமானதாக உள்ளது"[32] என்று கூறினார் - அது சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையாக உள்ளது. வேதசாட்சிகளாக மரித்தவர்கள் நிகழ்காலத்தைப் பற்றி அக்கறை கொண்டிருக்கையில், ஆண்டவர் நீண்ட - காலக் கண்ணோக்கைக் கொண்டிருந்தார்.

(2) *"என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: நான் உங்களைப் பற்றி அக்கறை கொண்டுள்ளேன்."* தேவன் இந்தக் கேள்விக்கு நேரடியாக வார்த்தையின் மூலம் பதில் கொடுக்கவில்லை என்றாலும், அது அக்கறைக்

குறைவைச் சுட்டிக்காண்பிப்பது இல்லை. ரோமர் 8ல் பவுலின் வார்த்தைகள் இவ்விடத்திற்கு ஏற்புடையவைகளாய் உள்ளன:

> உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லா வற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:35-39).

உபத்திரவமும் சோதனைகளும் தேவனுடைய அன்பை விலக்கி வைப்ப தில்லை.

இப்போது நாம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டுள்ள வசனப்பகுதியில், தேவன் பரிசுத்தவான்களுக்கு வெள்ள அங்கிகளைக் கொடுத்ததின் மூலம், தமது அன்பைக் காண்பித்தார், வெள்ளை அங்கிகள் எனப்படுபவை, தேவனுடைய அங்கீகாரத்தைச் சுட்டிக்காண்பிப்பதற்கு, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில்[33] அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளன: இவைகள் *வாக்குத்தத்தத்தின் அங்கிகளாய்* இருந்தன. ஏழுசபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில், ஜெயங்கொள்ளுபவர்களுக்கு ''வெள்ளை உடைகள்'' வாக்களிக்கப்பட்டன (3:5). இவைகள் *வெற்றியின் அங்கிகளாய்* இருந்தன. வெண்மை என்பது வெற்றியின் நிறமாய் இருந்தது.[34] கிறிஸ்தவத்தின் காரணம் பூமியின் குடிகளுக்கு எவ்விதமாய்க் காணப்பட்டாலும், அது வெற்றிகரமானதாகவே இருந்தது. தங்கள் விசுவாசத்திற்காக மரித்தவர்கள், தனிப்பட்ட முறையில் ஜெயங் கொண்டவர்களாய் இருந்தனர். இவைகள் *கனப்படுத்தப்படுதலின் அங்கிகளாய்* இருந்தன. ஜான் பௌமன் அவர்கள், வெள்ளை அங்கிகளை "பரலோக அரியணை அறையின் 'அரண்மனை உடை' " என்று குறிப்பிட்டார். அவர், "மேன்மைவாய்ந்த வட்டாரத்தில் அரசருக்கு ஏற்புடைய வகையில் உடுத்துவிக்கப்பட்டு முன்னிறுத்தப் படுபவர் யார்?" என்று கூறினார்.[35] அடுத்த அதிகாரத்தில் நாம், "... திரளான கூட்டமாகிய ஜனங்கள், ... சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்" என்பதை வாசிக்கும்போது, அவர்கள் "வெள்ளை அங்கிகளைத் தரித்து" இருப்பார்கள் (7:9).

இவ்விதமாக, பரிசுத்தவான்களுக்கு அங்கிகளைக் கொடுத்ததில் தேவன், அவர்களிடத்தில் "நான் உங்களை மறந்துவிடவில்லை. நீங்கள் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது என்பதை நான் அறிந்திருக்

கின்றேன், உங்களைப் பற்றிப் பெருமைப்படுகின்றேன். உங்கள்மீது நான் கொண்டுள்ள அன்பிற்கு நிரூபணமாகவும், உங்கள் நித்திய மகிழ்ச்சியான வாக்குறுதியாகவும் இந்த அங்கிகளை உங்களுக்கு உடுத்துவிக்கின்றேன்!" என்று கூறினார்.

*(3) "என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: இது சரியாகிவிடும்."* தேவன் பரிசுத்தவான்களுக்குச் சிலவற்றைச் செய்வதோடு நின்றுவிடவில்லை; அவர்களுக்கு அவர் சிலவற்றைக் கூறவும் செய்தார்: "இன்னுங்கொஞ்சக் காலம்[36] இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது" (வசனம் 11ஆ). ''இளைப்பாற'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை "காத்திருக்க" என்று அர்த்தப்படக்கூடும், இங்கு "பொறுமையாக இருக்க" என்பது மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. குட்ஸ்பீடு என்பவர் மொழிபெயர்த்துள்ள வேதாகமத்தில், ''அவர்கள் கொஞ்சக்காலம் அமைதியாய் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டது'' என்றுள்ளது.[37] வெளிப்படுத்தின விசேஷத்தின் பிற்பகுதியில் இவ்வார்த்தை "இளைப் பாறுதல் மற்றும் அமைதியாயிருத்தல்'' என்பதைக் குறிக்கிறது: "'கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்'!, 'அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்' ஆவியானவர் 'ஆம்' என்று திருவுளம் பற்றுகிறார்" (14:13). 6:11ல் "இளைப்பாறுதல்" என்பது 14:13ல் உள்ள அதே அர்த்தம் கொண்டிருக்கலாம்.

வேதசாட்சிகளாக மரித்தவர்கள், "தங்களைப்போலக் கொலைசெய்யப் படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும்'' (வசனம் 11இ) இளைப்பாறும்படி கூறப்பட்டது. இது, தேவன் தமது கரத்தில் கணக்கிடும் கருவி[38] ஒன்றை வைத்திருப்பதாகவும் குறிப்பிட்ட தொகை வரும் வரைக்கும் கொலைசெய்யப்பட்டவர்களை அவர் எண்ணிக் கொண் டிருந்ததாகவும் மனப்பதிவு ஒன்றை விட்டுச் செல்லலாம். உங்களிடம் NASB வேதாகமம் இருந்தால், "தொகை" என்ற வார்த்தை சாய்வெழுத்துக்களில் இருப்பதைக் கவனியுங்கள், இது இவ்வார்த்தை மொழிபெயர்ப்பாளர் களால் கூட்டப்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கிறது. மூல வசனத்தில் "தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்கள் நிறைவாகு மளவும்" என்று மாத்திரம் உள்ளது. NCV வேதாகமம் பின்வரும் கருத்தைக் கொடுக்கிறது: "அவர்களைப்போல், கிறிஸ்துவின் ஊழியத்தில் இருந்த அவர்களின் உடன் ஊழியர்கள், சகோதர சகோதரிகள் இன்னமும் கொல்லப்பட வேண்டியிருந்தது. இது நிறைவடையும் வரைக்கும் அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது." லியோன் மோரிஸ் அவர்கள், வசனம் 11ன் கடைசிப் பகுதியைப் பற்றிப் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,

> இது, தேவன் வேதசாட்சியாக மரிப்பவர்களின் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை விரும்புகின்றார் என்றும் அந்த ஏதாவதொரு வழியில் அடையப்படும் வரையிலும் அவர் காத்திருக்கின்றார் என்றும் அர்த்தப்படுவதில்லை. [மாறாக இது] அவர் தமது திட்டத்தைச்

செயல்படுத்திக்கொண்டுள்ளார் மற்றும் அந்தத் திட்டத்தில் மற்ற வேதசாட்சிகளுக்கு இடம் உள்ளது [என்று அர்த்தப்படுகிறது]. அந்தத் திட்டம் துரிதப்படுத்தப்படவோ தாமதப்படுத்தப்படவோ முடியாது.[39]

அதிக காலம் கடந்து செல்வதையும் அதிக கிறிஸ்தவர்கள் மரிப்பதையும் நியாயப்படுத்துவதைச் சாத்தியமாக்கும்படிக்குத் தேவன் கொண்டிருக்கக் கூடிய திட்டங்கள் யாவை?[40] 2 பேதுரு 3ம் அதிகாரம் ஒரு குறிப்பை அளிக்கிறது. பேதுருவின் நாட்களில், கர்த்தர் ஏன் இன்னும் திரும்ப வரவில்லை என்று சிலர் வியப்படைந்தனர் (2 பேதுரு 3:3, 4). காலத்தை நாம் கண்ணோக்குவதுபோல் தேவன் கண்ணோக்குவதில்லை என்பதைப் பேதுரு வலியுறுத்தியபின்பு (வசனம் 8), அவர் இயேசுவின் மறுவருகை தாமதப்பட்டது ஏன் என்பதை விளக்கப்படுத்தினார்: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (வசனம் 9). "தாமதப்படுத்தப்படும் ஒவ்வொரு கணமும் சுவிசேஷ ஊழியத்திற்கான ஒரு கொடையாக உள்ளது.'' துன்புறுத்துபவர்களைத் தேவன் உடனடியாகத் தண்டிக்காது இருந்ததற்கு, அவர்கள் மனந்திரும்புவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க அவர் விரும்பினார் என்பது ஒரு காரணமாயிருந்தது. (இது வினோதமானதாக ஒலிக்கலாம், ஆனால் இது உண்மையாய் இருக்கிறது என்பதைப் பிந்திய படிப்புகள் காண்பிக்கும்.)

நாம் இப்போது, இடர்ப்பாடுகளை பெற்றிருந்த பரிசுத்தவான்களுக்குத் தேவனுடைய பதிலின் மூன்றாம் பாகத்திற்குத் திரும்பச் செல்லுவோம்: வசனம் 11ன் பிற்பகுதியில் காணப்பட்ட சிந்தனைகளை நாம் ஒன்றிணைக்கும்போது, கர்த்தரிடத்தில் இருந்து நாம் பின்வரும் புத்திகூறுதலைப் பெறுகின்றோம்: "நான் எனது திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டுள்ளேன். அந்தத் திட்டங்கள் சற்றுக் காலத்தை எடுத்துக் கொள்ளும், ஆனால் அவைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதில் ஒருக்காலும் சந்தேகப்படாதீர்கள். அவற்றைத் துரிதப்படுத்த உங்களால் ஒன்றும் செய்ய முடியாது, எனவே நீங்கள் காத்திருக்கையில் பொறுமையாய் இருங்கள். எரிச்சல் அடைவதற்குப் பதிலாக, இரட்சிக்கப்பட்டுள்ள உங்கள் நிலையின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவியுங்கள்!" வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ''என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: இது சரியாகிவிடும்."

மீண்டுமாக, தேவனுடைய மக்கள் "எதுவரைக்கும்?" என்று கேட்ட வேதாகமத்தின் நிகழ்ச்சிகளை ஆய்வு செய்யுங்கள். அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முடிவில், கர்த்தர் சூழ்நிலையைச் சரியாக்கினார் என்பதைக் கண்டறிவீர்கள்! அடுத்த இரண்டு பாடங்களில் நாம், தேவன் தமது மக்களின் உபத்திரவம் பற்றிய ஒவ்வொன்றையும் சரியாக்குவதற்கு என்ன செய்யத் திட்டமிட்டார் என்பதன் நாடக இயல்பான செயல்விளக்கங்களைக் கொண்டிருப்போம்.[41] ஆபிரகாம், "சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ" என்று சரியாகவே கூறினார் (ஆதியாகமம் 18:25ஆ).

**இப்போது தேவனுடைய பதில்**

நீங்களும் நானும் இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளபொழுது, விஷயங்கள் ஏன் அவ்வாறு நடந்தன என்பதை நாம் அவ்வப்போது புரிந்து கொள்கின்றோம்: இந்தப் பாடக்கருத்தின்மீது வேதாகமம், வசனப்பகுதி யொன்றைச் சிலவேளைகளில் கொண்டுள்ளது; எப்போதாவது ஒருமுறை நாம் அதைக் கண்டறியவும் முடிகிறது. இருப்பினும், பெரும்பாலும் நாம் நமது துன்பங்களுக்குப் பகுத்தறிவுள்ள விளக்கத்தைக் காணமுடிவதில்லை. நாம் புரிந்துகொள்ளாத வேளையிலும், தேவனுடைய பதில், "சரியானதைச் செய்வதற்கு என்னில் நம்பிக்கையாய் இருங்கள்" என்பதாகவே உள்ளது - அந்தப் பதிலானது இன்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது:

*(1) "என்னில் நம்பிக்கையாய் இருங்கள்: உங்களால் புரிந்துகொள்ள முடியாது."* தேவனுடைய நீண்டகாலத் திட்டங்களை, முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களைப் போல, நீங்களும் நானும் புரிந்துகொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றோம். முதல் நூற்றாண்டில், "கேள்விகேட் பவர்களின் அக்கறையைக் காட்டிலும் தேவனுடைய அக்கறைகள் பெரிதாயிருந்தன" என்று நாம் கண்டோம் - இது இன்றைய நாட்களிலும் உண்மையாய் இருக்கிறது.[42] நாம் உலகத்தில் நமது சிறிய மூலையைப் பற்றி அக்கறையுடையவர்களாய் இருக்கின்றோம், அதேவேளையில் தேவன், ஒவ்வொரு நபரின்மீதும் அக்கறையுடையவராய் இருக்கின்றார். நாம் நமது இடர்ப்பாடுகளில் இருந்து விடுதலை அடைதல் பற்றி அக்கறையுடையவர் களாய் இருக்கின்றோம், அதே வேளையில் தேவன், நமக்கு எது மிகச்சிறந்தது என்பது பற்றி அக்கறையுடையவராய் இருக்கின்றார். தேவன் நம்மை மகிழ்விக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம், அதேவேளையில் தேவன் நம்மை மேன்மையானவர்களாக்க விரும்புகின்றார்.

தேவன், " 'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல,' ... 'பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' " என்று கூறினார் (ஏசாயா 55:8, 9). அது உண்மையாக இருப்பதால், நீதிமொழிகள் 3:5ன் பின்வரும் போதனைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியுள்ளது: ''உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து.''

*(2) ''என்னில் நம்பிக்கையாய் இருங்கள்: உங்களைப் பற்றி நான் அக்கறையாய் இருக்கின்றேன்.''* வேதசாட்சிகளாக மரித்த பரிசுத்தவான் களுக்குத் தேவன் கொடுத்த அதே வெள்ளை அங்கிகளை நமக்கும் (கொடுப்பதாக) அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (3:5), மற்றும் அவர் தமது அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தியது போலவே நம்மீதும்கூட நிலையாக வெளிப்படுத்துகின்றார். சிறுபிள்ளைகள், ''இயேசு எந்தன் நேசரே, கண்டேன் (வேதநூலிலே)'' என்று பாடுகின்றனர்; வயதுவந்த வர்கள், "அன்பு என்னை உயர்த்திற்று" என்று பாடுகின்றனர். இந்தப்பாடல் களின் வார்த்தைகள் உண்மையானவைகளாய் இருக்கின்றன என்று நாம் நம்புவதால், இவற்றை நாம் பாடுகின்றோம்! யோவான், ''நாம்

*தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:10) என்று எழுதினார். நாம், தேவனுடைய அன்பைப் பற்றிய இந்த உறுதிப்பாட்டைக் கொண்டுள்ள நிலையில், நமது வாழ்வில் என்ன நடந்தாலும் அவர் நமது இருதயத்தில் மிகச்சிறந்த ஆர்வம் கொண்டுள்ளார் என்பதை அறிவு முடியும்.*

*(3) "என்னில் நம்பிக்கையாய் இருங்கள்: இது சரியாகிவிடும்." நம்மில் பெரும்பான்மையானவர்கள், நிகழ்ச்சிகள் ஏன் நடக்கின்றன? தேவனுடைய முழுமையான திட்டம் என்ன? அதை அவர் எப்போது செயல் படுத்தப் போகின்றார்? என்பவற்றை அறிய விரும்புவோம். நமக்குச் செய்தியானது, நீண்ட காலத்திற்கு முன்பு கேள்வி கேட்ட பரிசுத்தவான் களுக்கு அளிக்கப்பட்ட செய்தி போன்றதாகவே உள்ளது: "அமைதியாய் இருங்கள். பொறுமையாய் இருங்கள். நான் எனது திட்டத்தைச் செயல் வடிவப்படுத்துகையில் காத்திருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இதற்கிடையில், நான் உங்களுக்குக் கொடுத்துள்ள ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுப வியுங்கள்!'' தேவனுடைய பதிலானது, நாம் விரும்புகின்றபடியாக மிகச்சரியாய் இராதிருக்கலாம், ஆனால் அதுவே நமக்கு மிகச்சரியாகத் தேவையானதாக உள்ளது.*

*புகழ் பெற்ற பாடல் ஒன்று பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது:*

*பக்தர் ஓயாத சத்தம்,*
*"எம்மட்டும்" என்பதாம்;*
*ராவில் நிலைத்த துக்கம்*
*காலையில் களிப்பாம்.*[43]

*"எதுவரைக்கும்?'' என்ற கேள்வியைக் கவனியுங்கள் - ஆனால் ஒரு நாளில் எல்லாம் சரியாக்கப்படும் என்பதில் உள்ள தன்னம்பிக்கையையும்/ தைரியத்தையும் கவனியுங்கள். இதை நான் மீண்டும் கூற என்னை அனுமதியுங்கள்: நமது வழியில் இடர்ப்பாடு வரும்போது நாம், ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்!*

> *''... உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள் ..." (2 நாளாகமம் 20:20).*
>
> *உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, ... (சங்கீதம் 37:5).*
>
> *"கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள், கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்" (ஏசாயா 26:4).*
>
> *கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் (எரேமியா 17:7).*

## முடிவுரை

"நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!" சில கேள்விகளுக்குத் தேவன் உடனடியாக நமக்குப் பதில் அளிக்கின்றார்; மற்றவற்றிற்குத் தாமதிக்கின்றார். சிலகேள்விகள் பதில் அளிக்கப்படத் தகுதியற்றவை என்பதால் அவற்றிற்கு அவர் ஒருக்காலும் பதில் அளிப்பதில்லை. தேவனுடைய பதில் என்னவாக இருப்பினும், அவர் சரியானவராகவே இருக்கின்றார் - நாம் அவரில் நம்பிக்கை வைத்தாக வேண்டும்.

ஒருகேள்விக்குத் தேவன் - தமது வசனத்தில் - ஏற்கனவே பதில் அளித்துள்ளார். அந்தக் கேள்வி 1 பேதுரு 4:17ஆ வில் காணப்படுகிறது: ''தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" இதற்கான பதில் 2 தெசலோனிக்கேயர் 1:7ஆ, 8ல் காணப்படுகிறது: ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்."

நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவரைக்கும்,[44] மறுபடியும் பிறக்கிறவரையிலும்,[45] உங்களால் தேவனுடைய பிள்ளைக்குரிய முன்னுரிமை வாய்ந்த நடத்துதலைப் பெற்றுக்கொள்ள இயலாது. நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமானால், அதை இன்றே செய்யுங்கள்!

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

வேதவசனங்களின் இந்தப் பகுதிக்குச் சில வேளைகளில், "வேதசாட்சியாய் மரித்தவர்களின் கூக்குரல்" என்ற தலைப்பு பயன்படுத்தப்படுகிறது. "எதுவரைக்கும்?" என்ற தலைப்பை நீங்கள் "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள பாடத்திற்குப் பயன்படுத்தாமல் இருந்தால், அது இந்தப் பாடத்திற்குச் சாத்தியக்கூறான இன்னொரு தலைப்பாக உள்ளது.

பலிபீடத்தின்கீழ் பரிசுத்தவான்களின் படம் ஒரு ஒட்டுமொத்தக் கண்ணோக்காய் உள்ளது. இடது புறத்தில் உள்ள பரிசுத்தவான்கள், "எதுவரைக்கும்?" என்று கதறுகின்றனர். வலதுபுறத்தில், பரிசுத்தவான்களில் ஒருவருக்குத் தூதன் ஒருவர் வெள்ளை அங்கியைக் கொடுக்கின்றார் (மற்றும் பரிசுத்தவான்(கள்) காத்திருக்கும்படி கூறப்படுதல் மறைவாய் உணர்த்தப்படுகிறது). இந்தப் புத்தகத்தொடரின் சித்திரங்களில் இங்குதான் முதன்முறையாக ஒரு தூதன் தோன்றுகின்றார், எனவே பிரையன் வாட்ஸ் அவர்கள், தூதனைச் சிறகின்றிச் சித்தரித்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்க

*இது ஒரு சிறந்தவேளையாக உள்ளது. கேருபீன்களும் சேராபீன்களும் சிறகுகள் உள்ளவைகளாக/உள்ளவர்களாக அடையாளத்துவமாய் வேதாகமத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன(ர்), ஆனால் மக்களுக்குத் தோன்றிய தூதர்களைப் பற்றிய விவரிப்பின் பாகமாகச் சிறகுகள் என்பவை ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை (எடுத்துக்காட்டாக, லூக்கா 24:4; நடபடிகள் 1:10ஐக் காணவும்). இந்தப் புத்தகத்தொடரில், தூதர்கள் சிறகுகள் இல்லாமல் சித்தரிக்கப்படுவார்கள்.*

---

*குறிப்புகள்*

[1]*இது வெளிப்படுத்தின விசேஷம் பற்றி ஜான் விக் பௌமன் அவர்கள் எழுதிய புத்தகத்தின் தலைப்பாக உள்ளது: The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955). [2]*இது, நான் வாழும் இடத்தில் உள்ள ஒரு சொல்விளக்கத்தின் தழுவுதலாக உள்ளது: "நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? நாங்கள் பதில்களைக் கொண்டுள்ளோம்!"* [3]*வசனம் 9ல் உள்ள "சாட்சி" என்ற வார்த்தை, martus என்ற வார்த்தையின் வினைவடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதிலிருந்தே நாம்* "martyr" *என்ற வார்த்தையைப் பெறுகின்றோம்.* [4]*இது சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவரின் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டிருந்த அதே அடிப்படை வார்த்தையாகவும் உள்ளது (6:4).* [5]*அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள ஒவ்வொரு மாகாணமும், குறிப்பிட்ட சில விலங்குகள் மற்றும் பறவைகளை வேட்டையாடுதல் குறித்த விதிமுறைகளைக் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட விலங்கின் மீதான "தாக்குதல் வேளையின்"* ["open season"] *போது, அதை வேட்டையாட எவரொருவருக்கும் அனுமதியளிக்கப் படுகிறது; "தாக்குதல் வேளை"யாய்* ["open season"] *இராதபோது, வேட்டையாடுதல் சட்டவிரோதமானதாக உள்ளது.* [6]*இந்த வார்த்தையில் இருந்துதான் நாம்,* "psyche," "psychology," *மற்றும் இது தொடர்பான சொற்றொடர்களைப் பெறுகின்றோம்.* [7]*Psuche அல்லது "ஆத்துமா" என்பது, ஒரு நபரைக் குறிப்பிடுவதாக மாத்திரமும் இருக்கலாம் (1 பேதுரு 3:20;* KJV *யை ஒப்பிட்டுக் காணவும்).* [8]*Psuche என்பது சிலவேளைகளில், மனிதனின் அழிவற்ற பகுதியைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது (எடுத்துக்காட்டாக, மத்தேயு 10:28ஐக் காணவும்). சந்தர்ப்பப்பொருள்தான் psuche என்ற வார்த்தையின் அர்த்தத்தைத் தீர்மானிக்கிறது.* [9]*இந்த ஆத்துமாக்கள் எங்கிருந்தனர் என்பதை மிகச்சரியாக கூறுதல் பற்றி யோவான் வேண்டுமென்றே தெளிவற்றிருந்தார். பிற்பாடு, வேத சாட்சியாக மரித்த கிறிஸ்தவர்கள் நியாயத்தீர்ப்பை அடையாமலேயே, நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்லுகின்றனர் என்ற மனிதப் பாரம்பரியப் போதனையொன்று எழும்பிற்று - அதை நிரூபிப்பதற்குச் சிலவேளைகளில் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருந்த இடம் பற்றி மிகச்சரியான தகவலைத் தருதல் என்பது யோவானின் நோக்கமாய் இருக்கவில்லை. நல்ல மற்றும் பொல்லாத ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருக்கக்கூடிய இடமான காணப்படாத உலகம் பற்றிய மிகவிரிவான கலந்துரையாடல் லூக்கா 16ல் காணப்படுகிறது.* [10]*யெகோவா சாட்சிக்காரர்கள் மற்றும் பிற பொருள்முதல்வாத மதக்குழுவினர், மனிதன் அழிந்துபோகாத ஆத்துமாவைக் கொண்டுள்ளான் என்ற கருத்தை மறுக்கின்றனர். ஒரு நபரின் உடல் இறக்கும்போது, அந்த நபர் தேவனின் நினைவில் தவிர, இல்லாது*

ஒழிகின்றார் என்று உரிமை கோருகின்றனர். வசனரீதியற்ற இந்த நிலைப்பாட்டின்படி, உயிர்த்தெழுதல் என்பது உண்மையில் ஒரு மறுபடைப்பாக உள்ளது. இந்த மற்றும் இதைப்போன்ற நிலைப்பாடுகள் சில வேளைகளில் "ஆத்துமா நித்திரை செய்யும்" கோட்பாடு என்று அழைக்கப்படுகின்றன.

[11]இந்தப் புத்தகத்தில் "கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது," என்ற இனிவரும் பாடத்தில் உள்ள, ஆசரிப்புக்கூடாரத்தின் வரைபடத்தைக் காணவும். [12]இவ்விடத்தில் பலிபீடம் என்பது எந்த பலிபீடத்தை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் சற்றே சரிசமமாகப் பிரிந்திருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் ஒரே ஒரு பலிபீடத்தை மாத்திரமே குறிப்பிடுகிறது என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். [13]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 157. [14]இயேசு "ஒரேதரமாக" பலிசெலுத்திவிட்டதால் (எபிரெயர் 10:10, 12), இது பலிபீடமாய் இருக்க முடியாது என்று சிலர் வாதிடுகின்றனர், ஆனால் கிறிஸ்தவர்களும் கர்த்தருக்கு ஆவிக்கேற்ற பலிகளாக/ஜீவபலிகளாக பேசப்படுகின்றனர் (எபிரெயர் 13:15; ரோமர் 12:1ஐயும் காணவும்). [15]இந்த அடையாளத்துவம் நமக்கு, ஆதியாகமம் 4:10ஐ நினைவுக்குக் கொண்டு வருதலை நோக்கமாய்க் கொண்டும் இருக்கலாம். [16]பல மொழிபெயர்ப்புக்களில் "இராஜரீகமான கர்த்தர்" ["Sovereign Lord"] என்றுள்ளது. "எஜமானர்" ["Master"] என்பது நல்லதொரு மொழிபெயர்ப்பாயிருக்கும். [17]இதனால், வெளிப்படுத்தின விசேஷம் புதிய ஏற்பாட்டு மதவியல் நூலின் பகுதி என்பதை ஏற்றுக்கொள்ளச் சிலர் மறுத்துள்ளனர். சிலர், பழிவாங்குதலின் மீதான இந்த வலியுறுத்தத்தை, இந்தப் புத்தகத்தின் நம்பகத்தன்மை பற்றி அறைகூவல் விடுக்கப் பயன்படுத்துகின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏவுதல் பெற்ற தன்மையில் நம்பிக்கை கொண்ட மற்றவர்கள், ''பலிபீடத்தின்கீழ்'' இருந்தவர்கள் கிறிஸ்தவர்களாய் இருக்க முடியாது, எனவே அவர்கள் யூதர்களாய் இருக்க வேண்டும் என்று முடிவு செய்கின்றனர். இருப்பினும், இவர்கள் கிறிஸ்தவர்களே என்பது கேள்விகேட்கப்பட இயலாத கருத்தாக உள்ளது: (1) இவர்கள், யோவான் நாடுகடத்தப்பட்டிருந்த அதே காரணத்திற்காகவே கொல்லப்பட்டிருந்தனர் (1:9; 6:9). (2) இவர்கள், கிறிஸ்தவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த அதே பலனைப் பெற்றிருந்தனர் (3:5). (3) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது தங்கள் உபத்திரவத்தில் அர்த்தத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த (யூதர்களையல்ல, ஆனால்) கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துவதற்காகவே எழுதப்பட்டது. [18]மத்தேயு 5:39. [19]லூக்கா 23:34. ஸ்தேவான் தம்மைக் கல்லெறிந்தவர்களுக்காக இவ்வாறே ஜெபம் செய்தார் (நடபடிகள் 7:60). [20]குற்றம் இழைத்தவர்களைத் தண்டிப்பதில் மிகவும் அடிக்கடி தவறியிருந்த சட்டமுறை என்பது இதற்கு ஒரு காரணமாய் இருந்தது என்று சிலர் நினைக்கின்றனர். காரணம் எதுவாக இருப்பினும், தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலை மேற்கொள்வதற்கோ அல்லது அதே விஷயத்தை மற்றவர்கள் செய்யும்படி ஊக்குவிப்பதற்கோ சாய்ந்து விடுதலைக் கிறிஸ்தவர்கள் எதிர்த்து நிற்க வேண்டும்.

[21]இதை நீங்கள் வேதாகம வகுப்புப் பாடமாகவோ அல்லது பிரசங்கமாகவோ பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் ஏதாவது வழியில் பதில்செயல் செய்யும்படிக் கேட்டுக்கொள்ள நீங்கள் விரும்பலாம். [22]ஜட்சோனியாவில் எனது புதன்கிழமை இரவு வகுப்பு மாணவர்களில் ஒருவர், சிறுகுழந்தைகள்கூட நியாயம் செய்வதன் கருத்தை உள்ளுணர்விலேயே பெற்றுள்ளனர் என்று சுட்டிக்காண்பித்தார். [23]தனிநபருக்குரிய அல்லது தனிப்பட்ட வகையில் தவறான செயலுக்குப் பழிவாங்குதல் செய்யத் தனிநபர்கள் தங்களைத் தேவனால்

நியமிக்கப்பட்டவர்கள் என்று நம்புவதினால் மாபெரும் தீமைகள் விளைந்துள்ளன. குடியுரிமை அரசானது, "தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப் பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ரோமர் 13:4இ), ஆனால் பழிவாங்குதல் என்பது ஒருக்காலும் தனிப்பட்ட வகையிலான பழிதீர்த்துக் கொள்ளுதலாய் இருக்கக்கூடாது. [24]பவுல் தமது சொந்த அறிவுரையை மேற்கொள்வது பற்றிய ஒரு உதாரணத்திற்கு, 2 தீமோத்தேயு 4:14ஐக் காணவும். [25]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 73. [26]கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களுடன் கூடுதலாக, சங்கீதம் 6:3; 35:17; 74:9-11; 79:5; 80:4; 89:46; 90:13; ஏசாயா 6:11; எரேமியா 47:6; சகரியா 1:12 ஆகிய வசனங்களைக் காணவும். [27]தேவனுடைய கால அட்டவணையில் பிரச்சனைகளைக் கொண்டிருந்த சிலரைப் பற்றிக் குறிப்பிடுகிற பல இணைவுகளை 2 பேதுரு 3 உடன் தரவழைக்க முடியும். அந்த வசனப்பகுதியானது இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [28]''உலகம் பைத்தியமாகியுள்ளதற்கான" தற்கால உதாரணங்கள் சிலவற்றை நீங்கள் கொடுக்க விரும்பலாம். [29]அவர்களுக்கு அங்கிகளைக் கொடுத்தது யார்? அவர்கள் "இளைப்பாற'' வேண்டும் என்று கூறியது யார்? அனேகமாக, அவர்களுக்குத் தூதர்கள், அங்கிகளைக் கொடுத்திருக்க வேண்டும் (எபிரெயர் 1:13, 14). புத்திமதியானது பலிபீடத்தில் இருந்தே வந்திருக்கலாம் (9:13ஐக் காணவும்). இந்த செயல் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றிற்குப் பின்புறத்தில் தேவன் இருந்தார் என்பதே முக்கியமானதாக உள்ளது. [30]ஏசாயா 6:11 சாத்தியக்கூறுள்ள ஒரு விதிவிலக்காக உள்ளது.

[31]யோபுவின் முறையீட்டுக்குத் தேவன் நேரடியாகப் பதில் அளிக்காமல், அதற்கு மாறாக யோபு தமது திறனற்ற தன்மையைப் புரிந்து கொள்வதற்காக, அவரிடத்தில் தேவன் வரிசையாகக் கேள்விகள் கேட்டார் என்ற உண்மையின் இணைவு தரவழைக்கப்படலாம். [32]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 67. [33]6:11ல் "அங்கி" ["உடை"] என்பதற்கு *stole* (இது "sto-lay" என்று உச்சரிக்கப்படுகிறது) என்ற கிரேக்க வார்த்தை உள்ளது. இது "நீளமாகத் தொங்கும் ஒரு உடையாக" இருந்தது (Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* [Grand Rapids, Mich.: Baker Book House, 1979], 196). இந்தக் குறிப்பிட்ட வார்த்தையானது வெளிப்படுத்தின விசேஷத்தில் இங்குதான் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (இது மீண்டும் 7:9, 13; 22:14 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்படும்), ஆனால் இது 1:13ல் குறிப்பிடப்பட்ட அதே வகையான உடையைக் குறிக்கிறது: "a robe [or garment] reaching to the feet" [தமிழில் இது "நிலையங்கி" என்றுள்ளது.] "அங்கி" என்பதற்கு மிகவும் பொதுப்படையான வார்த்தை, 3:4, 5, 18; 4:4; 16:15; 19:13, 16 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது; ஆனால் இவ்விரு வார்த்தைகளின் அர்த்தத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இல்லை. [34]இந்தப் புத்தகத்தில் ''முழக்கமிடும் குழம்பொலிகள்'' என்ற பாடத்தில் 6:2க்கான குறிப்புகளைக் காணவும். வெற்றிகொள்பவர்கள் வெண்மை நிற உடைகளை அணிதல் பற்றிய உதாரணங்களுக்கு, 7:9 மற்றும் 19:14 ஆகிய வசனங்களைக் காணவும். [35]Bowman, 51. அந்த நாட்களில் விசேஷ நிகழ்ச்சிகளின்போது குறிப்பிட்ட உடையை அணிதலின் அவசியம் பற்றி மத்தேயு 22:11-13ல் காணமுடியும். [36]''கொஞ்சக்காலம்'' என்ற சொற்றொடர் வேண்டுமென்றே தெளிவற்றதாக உள்ளது. (அது எதனுடன் ஒப்பிடும்போது "கொஞ்சக்காலமாக" இருந்தது?) கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் என்பது என்றென்றைக்கும்

உள்ளதாயிராது, அது முடிவுக்கு வரும் என்று உறுதிப்படுத்துவதே இவ்வசனப்பகுதியின் நோக்கமாயிருந்தது. [37]*The New Testament: An American Translation*, ed. Edgar J. Goodspeed (Chicago: The University of Chicago Press, 1923), 460. [38]எண்ணிக் கணக்கிடுவதற்கு நீங்கள் வாழும் பகுதியில் பயன்படுத்தப்படும் எந்த ஒரு கருவியையாவது இவ்விடத்தில் நீங்கள் குறிப்பிடுங்கள். நான் உக்கிரைன் நாட்டில் இருந்தபோது, வணிகர்கள் சிலர், அபாகஸ் என்ற கருவியைப் பயன்படுத்தினர். [39]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 107. [40]தேவபக்தியுள்ளவர்களின் மரணத்தை நாம் கண்ணோக்குவதுபோல் தேவன் கண்ணோக்குவதில்லை என்று சுட்டிக்காண்பிக்க நீங்கள் விரும்பலாம் (சங்கீதம் 116:15).

[41]நீங்கள் 19:2ஐக் குறிப்பிட விரும்பலாம்: "தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக ... பழிவாங்கினாரே ... ." [42]இவ்விடத்தில் பயன்படுத்தக்கூடிய ஒரு சிந்தனை பின்வருமாறு: ''நீங்களும் நானும் சுரங்கத் தரிசனத்தைக் கொண்டுள்ளோம்.'' உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் ''சுரங்கத் தரிசனம்'' [tunnel vision] பற்றிய விவரித்தல் ஒன்றைக் கூட்டிக்கொள்ளுங்கள்: பார்வை மறைப்புகளுடன் [குதிரையின் கண்களின்மீது போடப்படும் திரை] உள்ள ஒரு குதிரை, சுரங்கத் தரிசனத்தை உண்டாக்கும் குளுக்கோமா என்ற கண் நோய் அல்லது தம்மைச் சுற்றி நடக்கிற விஷயங்களைக் காண இயலாத நிலையில் உள்ள ஒரு நபர் பற்றிய உதாரணம். [43]S. J. Stone, "The Church's One Foundation," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). இந்தப் பாடல் உங்கள் பாடல் புத்தகத்தில் இருந்ததென்றால், இதை நீங்கள் உங்கள் ஆராதனை ஊழியத்தில் பயன்படுத்த விரும்பலாம். ''கிறிஸ்து வருகின்றார்'' போன்ற மற்ற பாடல்களிலும் "எதுவரைக்கும்?" என்ற வார்த்தைகள் அடங்கியுள்ளன. [44]ரோமர் 6:3, 4, 17, 18 ஆகிய வசனங்கள், நாம் எவ்வாறு சுவிசேஷத்திற்கு (இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற நற்செய்திக்கு)க் கீழ்ப்படிகின்றோம் என்பதை விவரிக்கின்றன: நாம் நமது விசுவாசம் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றினால் பாவத்திற்கு மரிக்கின்றோம்; நாம் ஞானஸ்நானத்தில் அடக்கம்பண்ண (முழுக்காட்ட)ப்படுகின்றோம், மற்றும் நாம் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்/எழுப்பப் படுகின்றோம். [45]யோவான் 3:3, 5; 1 பேதுரு 1:22, 23.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது யோவான் கண்டது என்ன?
2. 6:9, 10ன் காட்சி உங்கள்மீது ஏற்படுத்தும் மனப்பதிவை விவரிக்க நீங்கள் என்ன வார்த்தையைப் பயன்படுத்துவீர்கள்? பலிபீடத்தின் கீழிருந்த பரிசுத்தவான்கள் உணர்ந்தவாறு நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கின்றீர்களா?
3. பலிபீடத்தின்கீழ் இருந்தவர்கள் யார்? அவர்களுக்கு என்ன நடந்திருந்தது?

4. “பலிபீடத்தின்கீழ்” என்ற விவரிப்பின் தனிச்சிறப்பு என்ன?
5. வேதசாட்சியாய் மரித்தவர்கள், பழிவாங்குதலுக்காகக் கதறியது உங்களைக் கவலைப் படுத்துகிறதா? இப்படிப்பட்ட எண்ணப்போக்கிற்குக் கிறிஸ்தவப் பதிவேட்டில் இடமில்லை என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
6. “சரிக்குச் சரிசெய்தல்” என்று விரும்புதல் இயல்பானதாக உள்ளதா? இது சரியானதா?
7. தனிப்பட்ட பழிவாங்குதல் மற்றும் தெய்வீக நியாயந்தீர்த்தல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டைப் பற்றிக் கலந்துரையாடவும்.
8. துன்மார்க்கரைத் தண்டிக்கத் தேவன் ஏன் இவ்வளவு காலம் கடத்துகின்றார் என்று நீங்கள் எப்போதாவது வியப்படைந்து இருக்கின்றீர்களா? இப்படிப்பட்ட கேள்விகள் எப்போது தவறாகின்றன?
9. இந்தப் பாடத்தின்படி, 6:11ல் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ள அடிப்படைப் பதில் என்ன? இந்தப் பதிலின் மூன்று பாகங்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.
10. பலிபீடத்தின்கீழ் இருந்தவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டதின் முக்கியத்துவம் என்ன?
11. 6:11ல் “இளைப்பாறுதல்” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?
12. நீங்களும் நானும் தேவனுடைய முழுமையான திட்டத்தை எப்போதுமே புரிந்து கொள்கின்றோமா? நாம் அதைப் புரிந்து கொள்ளாதபோது, நாம் என்ன செய்ய வேண்டும்?



*பலிபீடத்தின் கீழ் இருந்த ஆத்துமாக்கள் (6:9)*